REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 3] சென்னை: ஆனி 15உ புதன் (29—6—55) ★ ★ வெளியூர்: ஆனி 16உ வியாழன் (30—6—55) [இதழ் 13

சமரச முயற்சி தோல்வி!

கொடி அவமரியாதை செய்யப்பட்டதையொட்டி ஆப்கானிஸ்தானுக்கும்—பாகிஸ்தானுக்கும் இடையே ஏற்பட்ட நெருக்கடியில், கடந்த 6 வார காலமாக நடைபெற்ற சமரச பேச்சுவார்த்தைகள் முறிந்துவிட்டன என்று தெரிகிறது.

சமரசப் பேச்சுவார்த்தைகள் அனைத்தும் முறிந்துவிட்டதால் சமரச முயற்சியிலீடுபட்ட சவூதி அரேபியா, எகிப்து தூதுவர்கள் தங்கள் தங்கள் நாடுகளுக்குத் திரும்பிவிட்டனராம்.

பக்தூனிஸ்தான் பிரச்சினையில் பாகிஸ்தானின் கோரிக்கைக்கு ஆப்கானிஸ்தான் இணங்க மறுத்துவிட்டதே இம்முறிவுக்குக் காரணமாம்.

அகதிகள் குடியிருப்புக்கு ரூ. 100 கோடி!

ஆறு கிழக்கு மாநிலங்களில் குடியேற்றம்

வீடு கட்டித் தருதல், வீடு கட்டக் கடன் கொடுத்தல், தொழிலுக்கு வாய்ப்பு, மருத்துவ வசதிக்கான திட்டங்கள்!

இரண்டாவது திட்டத்தில் இடம் பெறுமாம்!

இந்தியாவில் உள்ள ஆறு மாநிலங்களில் 30 இலட்சம் அகதிகளைக் குடியேற்ற திட்டமிடப்பட்டிருக்கிறது.

அக் குடியேற்றத்தை ரூ. 100 கோடி செலவில் வெற்றிகரமாக நிறைவேற்ற முடிவு கட்டப்பட்டிருக்கிறது.

அரசாங்கத் துறையின் பொறுப்பில் வீடுகளைக் கட்டுதல், வீடுகள் கட்டிக்கொள்ள அகதிகளுக்குக் கடன் கொடுத்து உதவுதல், பணி பெறும் வாய்ப்புகளை விரிவுபடுத்தல், தேவையான அளவு மருத்துவ வசதிக்கு ஏற்பாடு செய்தல் போன்ற துறைகளுக்கான திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

இடம்பெயர்ந்த விவசாய அகதிகளுக்குக் கடன் கொடுப்பதற்காக மட்டும் ரூ. 20 கோடி சிபாரிசு செய்யப்பட்டு இருக்கிறது.

கீழ் ரக, நடுத்தர உறுப்பினர்களின் சிறு வியாபாரத்திற்கு உதவுவதற்கென ரூ. 9-கோடி சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது.

இந்த ரூ. 100 கோடி திட்டத்தை, ஆறு கிழக்கு மாநில அரசாங்க அகதி மறுவாழ்வுத்துறை ஆணையாளர்களும், கடந்த இரண்டு நாட்களாகக்கூடி விவாதித்து உருவாக்கியுள்ளனர்.

இந்தத் திட்டம், கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வெளியேறியுள்ள அகதிகளின் மறுவாழ்வு பற்றியதேயாகும்.

மேற்குறிப்பிட்ட திட்டத்தை ஒத்த வேறு ஒரு திட்டமும், மேற்குப் பாகிஸ்தானிலிருந்து வெளியேறியுள்ள அகதிகளுக்கும் திட்டப்பட இருக்கிறது.

அதுபற்றி விவாதித்து திட்டம் தீட்ட, மேற்கு வட்டார அகதிகள் மறுவாழ்வு அமைச்சர்கள் ஜூலை மாதம் இரண்டாவது வாரத்தில், இந்தியப் பேரரசின் அகதிகள் மறுவாழ்வுத்துறை அமைச்சர் கன்னா தலைமையில், காஷ்மீர் தலைநகரான ஸ்ரீநகரில் கூடவிருக்கின்றனர்.

கல்கத்தாவில் கூடிய அகதிகள் மறுவாழ்வுத்துறை ஆணையாளர்கள், பெருத்த அளவில் வீடுகளையும் குடியிருப்புகளையும், ஏற்கனவே வந்துள்ள அகதிகளுக்குக் கட்டித் தரும் பொறுப்பை இந்தியப் பேரரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளனர். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், மேற்குறித்த கோரிக்கைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென, அவர்கள் கோரியுள்ளனர்.

அகதிகளுக்கு, தொழில் இனக் கடனாகக் கொடுக்கப்படுவதற்கென தற்சமயம் ஒதுக்கப்பட்டிருக்கும் ரூ. 10 கோடி, அகதிகளின் தேவையைப் பூர்த்தி செய்வதாக இல்லை என்றும், அத்தொகை ரூ. 15 கோடியாக உயர்த்தப்பட வேண்டுமென்றும், அவ்வாறு உயர்த்தப்படுதல் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 3 கோடி என்ற முறையில் இருக்கவேண்டும் என்றும், இவ் வேற்பாடு இரண்டாவது திட்டக் காலத்தில் நிறைவேற்றப்பட வேண்டுமென்றும் அக்குழு கருத்தறிவித்திருக்கிறது.

மேற்கு வங்கத்தில் மேலும் பயிர் செய்யக்கூடிய நிலத்திற்குத் தட்டு ஏற்பட்டு இருப்பது சென்ற கால அனுபவமாக இருந்து வருவதால், கூடுதலாக இருக்கும் அகதிகளைக் கூட்டம் கூட்டமாக வேறு மாநிலங்களுக்குக் குடியேற்றுவதற்காக, பிடிக்கும் செலவிற்குப் பணமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

ஆந்திரம், ஐதராபாத், மத்திய பிரதேசம், மைசூர், ஒரிசா ஆகிய மாநிலங்களில், பண்படுத்திப் பயிர் செய்யக்கூடிய நிலவசதி இருக்கும் பகுதிகளில் குடியேற்றி, பயிர் செய்து ஜீவிக்கவும், தொழில் செய்து வாழ்வதற்கான தொழில் வசதிகளைத் தேடித் தருவதற்கும் திட்டமிடப்பட்டிருக்கிறது!

கிழக்கு பாகிஸ்தானிலிருந்து மேற்கு வங்கத்தில் குடியேறியுள்ள அகதிகளுக்கு மட்டுமே, மேற்குறித்த ஏர்பாடு செய்யப்பட இருக்கிறது! கல்கத்தாவில் கூடினவர்களின் சிபாரிசும் அதுபற்றி மட்டுமேயாகும்.

மேற்கு பாகிஸ்தான் அகதிகளுக்குச் செய்து தரவேண்டிய வசதிகள் குறித்து. ஸ்ரீநகரில் கூட இருக்கும் அமைச்சர்கள் கூட்டம் இனிமேல் தீர்மானிக்க இருக்கிறது! அது, எத்தனை கோடி ரூபாய் செலவில் திட்டம் கொடுக்கக் காத்திருக்கிறதோ—யார் கண்டார்கள்?

சிறு சேமிப்புகள் மூலம் ரூ. 300 கோடி வசூலிக்க முயற்சி

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், சிறு சேமிப்புகள் மூலமாக 300 கோடி வரையிலும் திரட்டுவதென இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளனர் எனக் கூறப்படுகிறது.

முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் இலட்சியத் தொகையாகிய ரூ. 245 கோடி வசூலாகாவிட்டாலும் ரூ. 225 கோடி கிடைத்துவிடுமென்று கூறப்படுகிறது.

வட இந்திய நடிகருக்கு 'வாரண்ட்'

பம்பாய், ஜூன் 28—

வடஇந்திய திரைப்பட நடிகரான திலீப் குமார்மீது பந்தாரா மாகாண மாஜிஸ்திரேட் ஜாமீனில்லாத 'வாரண்ட்' ஒன்றைப் பிறப்பித்துள்ளாராம்.

திலீப் குமார் மீது திராவகம் வீச சிலரால் முயற்சிக்கப்பட்டதாகத் தொடரப்பட்ட வழக்கொன்றில் அவர் முக்கிய சாட்சியாக விசாரிக்கப்பட இருக்கிறார். இவ் வழக்கு விசாரணை இருமுறை நடைபெற்றபோதும் அவர் நீதி மன்றத்திற்கு வரத் தவறியதால் இந்த 'வாரண்ட்' உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதெனத் தெரிகிறது.

முதல் விசாரணையின்போது அவர் கோர்ட்டிற்கு வராதபோது அவர்மீது 'ஜாமீன் வாரண்ட்' பிறப்பிக்கப்பட்டதென்றும், இரண்டாவது முறையும் அவர் வரத் தவறியதால்தான் 'ஜாமீனில்லாத வாரண்ட்' பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்றும் கூறப்படுகிறது.

முதல் தடவை விதிக்கப்பட்ட ஜாமீன் வாரண்டின்போது, ஜாமீனுக்கு நின்றவருக்கும் மாஜிஸ்திரேட் ஒரு 'நோட்டீஸ்' அனுப்பினாராம். 'ஜாமீன் தொகையை ஏன் அந்த நபர் இழக்கக்கூடாது?' என்பதற்கான காரணம் காட்டுமாறு அதில் கேட்கப்பட்டுள்ளதாம்.

'சேவகருக்குக் கிடைக்கும் ஊதியம் கூட ஆசிரியருக்கு கிடைப்பதில்லை'

கல்வியின் தரக் குறைவிற்குக் காரணம்?

மத்திய கல்வி இலாகா செயலாளர் விளக்கம்

போபால், ஜூன் 28—

"நாட்டிலுள்ள கல்வியின் தரம் குறைந்திருப்பதற்கும், மாணவர்களிடையே ஒழுக்கம் குன்றிக் காணப்படுவதற்கும் முக்கிய காரணம் ஆசிரியர்களின் 'தரம்' குறைந்து விட்டதேயாகும்."

என்று, மத்திய கல்வி இலாகாக் கூட்டுச் செயலாளர் அஷ்பாக் உசேன் கூறியிருக்கிறார்.

அதிக ஊதியம் கிடைக்கும் மற்ற வேலைகள் தங்களுக்குக் கிடைக்காத காரணத்தாலேயே அவர்கள் ஆசிரியர் தொழிலை மேற்கொண்டுள்ளனர் என்றும் அதனால் தான் பொதுப்படையாக அவர்களுக்குக் கல்விமீது வெறுப்பு ஏற்பட்டிருக்கிறது என்றும் அவர் மேலும் கூறியிருக்கிறார்.

சென்ற மூன்று வாரமாக போபாலில் நடைபெறும் தலைமை ஆசிரியர்கள் மாநாடொன்றில் பேசிய அவர் மேலும் குறிப்பிட்டார்:—

"சில இடங்களில் ஒரு ஆசிரியருக்குத் தரப்படும் ஊதியம், அங்குள்ள சேவகர் ஒருவருக்குத் தரப்படும் ஊதியத்தைக் காட்டிலும் குறைவாக இருக்கிறது. ஒரு போலீஸ் கான்ஸ்டபிளுக்கு இருக்கின்ற மரியாதைகூட ஆசிரியருக்கு இருக்கவில்லை."

"நாட்டில் நல்ல ஒரு சமுதாயம் தோன்றுவதற்கான அடிப்படை, அந்த நாட்டில் தகுதி உள்ள சிறந்த ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டு, அவர்களுக்குத் தரப்படும் ஊதியமும் 'நியாயமாக' நிர்ணயிக்கப்பட வேண்டும்."

தேயிலைத் தோட்டத் தொழிலாளர் வேலை நிறுத்தம் 'வாபஸ்'

சென்ற ஒரு வார காலமாக டார்ஜீலிங்கில் நடைபெற்ற தோட்டத் தொழிலாளர் வேலை நிறுத்தம் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. சர்க்காருக்கும், தொழிலாளர் சங்கத்திற்குமிடையே இருந்த தகராறுக்கு முடிவு காணப்பட்டதே இந்த வேலை நிறுத்தம் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதற்குக் காரணமாம்.

தோட்டத் தொழிலாளரது தினசரிக் கூலியை ரூ. 1—4—0 லிருந்து ரூ 1—5—6 ஆக உயர்த்தப்படுமென்று சர்க்கார் உறுதி தந்துள்ளனராம். மேலும், தொழிலாளரின் எல்லா கோரிக்கைகளும் பரிசீலிக்கப்படும் என்றும் சர்க்கார் தொழிலாளருக்கு உறுதி கூறின பின் பேரிலேயே மேற்படி வேலை நிறுத்தம் நிறுத்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இதுதவிர, துப்பாக்கிப் பிரயோகம் பற்றி விசாரணை நடத்த பாரபட்சமற்ற ஒரு விசாரணைக் குழுவை நியமிக்கவும் சர்க்கார் ஒப்புதல் தந்துள்ளனராம். இக்குழுவில் சர்க்கார் அதிகாரிகள் அல்லாதவர்களும் அங்கம் வகிக்கக்கூடும் என்று கூறப்படுகிறது.

***** - * - *********************** **********

தலைமைக் கழகம்: அறிக்கை—18/55

கழகத் தோழர்களுக்கு

★

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது மாசு கற்பிக்க வேண்டும் என்ற தீய எண்ணத்துடன் கழகத்தின் செய்திகளையும், கருத்துக்களையும், கழகப் பேச்சாளர்களின் பேச்சுக்களையும் உள்ளது உள்ளவாறு வெளிப்படுத்தாமல், அவற்றை மறைத்தும்—மாற்றியும்—திரித்தும்—இல்லது புனைந்தும் வெளியிடும் பழக்கத்தைத் 'தினத் தந்தி' ஏடு நீண்ட காலமாகவே கொண்டிருக்கிறது என்பதை நாம் அடிக்கடி எடுத்துக் காட்டிக் கண்டித்தும், 'இனி செய்ய வேண்டாம்' என்று அதற்கு எச்சரிக்கை விடுத்தும் வந்துள்ளோம். மேற் சுட்டிக் காட்டப்பட்ட இழிமுறைகளினின்றும் தன் போக்கை மாற்றிக்கொள்ள 'தினத் தந்தி' நாணயத்தோடும் நேர்மையோடும் முன்வந்ததாகத் தெரியவில்லை.

"தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த வேளூரில் 23—6—55-ம் நாளன்று எங்கும் நடைபெறுவது போன்றதோரு சீர்திருத்தத் திருமணம் அண்ணா அவர்கள் தலைமையின்கீழ் நடைபெற்றிருக்க, மந்திரங்களோடு கூடிய புரோகிதத் திருமணம் நடைபெற்றதாகத் திருத்தித் 'தினத் தந்தி' கூறியிருப்பது, அருவருத்து ஒதுக்கத்தக்கதாகும்.

"இப்படிப்பட்ட 'தினத் தந்தி'யில் கழகத்தைப் பற்றியோ அல்லது கழகத் தோழர்களைப் பற்றியோ எத்தகைய செய்தி வந்தாலும் கழகத் தோழர்களும், பொதுமக்களும் அதனை ஆதாரமாகக் கொள்ளவோ, அதற்கு மதிப்பு கொடுக்கவோ வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறோம்.

"கழகத் தோழர்களும், கழகச் சொற்பொழிவாளர்களும், எந்தத் 'தினத் தந்தி' நிருபருக்கும் எக்காரணங் கொண்டும் பேட்டி அளிக்கவோ, செய்தி கொடுக்கவோ வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்கிறோம்.

'கிளைக் கழகங்கள் மாநாடுகளிலோ அல்லது பொதுக்கூட்டங்களிலோ, பத்திரிகை நிருபர்களுக்குப் பொதுவாகக் கொடுக்கப்படுகிற சலுகைகள்—உரிமைகள் ஆகியவற்றை 'தினத் தந்தி' நிருபருக்கு மட்டும் அளிக்க வேண்டாம் என்று, இதன்மூலம் தலைமைக் கழகம் கட்டளை பிறப்பிக்கிறது."

"அறிவகம்" சென்னை 29—6—55

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.

** - **

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 29—6—'55 புதன்

அமைச்சர்கள் கட்டியம்!

திராவிடம், விவசாயத்தையே மூலத் தொழிலாகக் கொண்டிருக்கிறது. வெள்ளையர் ஆட்சி காலத்திலும் நிலை இதுதான்; வட நாட்டு இந்தி ஏகாதிபத்தியக் காலமான இக்காலத்திலும் அதே நிலைதான்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் மற்ற வட மாநிலங்கள் அனைத்தும் வெகு வேகமாக தொழில் துறையில் முன்னேற்றம் பெற்றுள்ளன; மேலும் தொடர்ந்து பெற்றும் வருகின்றன.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும், வட மாநிலங்களில் மேலும் கூடுதலான தொழில் ஏற்பாடுகளுக்கு அளவுக்கு அதிகமான பணம் ஒதுக்கப்படும் என்பதற்கான அறிகுறிகள் கிடைத்த வண்ணம் இருக்கின்றன. மாநிலங்களின் கோரிக்கைப் பட்டியல்களே மேற்குறித்துள்ள அறிகுறிகளாகும்.

'முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில், திராவிடம் அறவே அலட்சியப் படுத்தப்பட்டுள்ளது'— இத்தகு கருத்து, திராவிட காங்கிரஸ் தலைவர்களிடத்திலும் பலமாக இருந்துவருவது பகிரங்க இரகசியமாகும்.

தொழில் வளர்ச்சியில்தான், திராவிடத்தை இந்தியப்பேரரசு வேண்டுமென்றே ஒதுக்கிவிட்டது என்று மட்டுமே எண்ணிவிடத் தேவை இல்லை. விவசாயத்தையே மூலத் தொழிலாக நம்பி வாழ்ந்துவரும் திராவிடத்திற்கும், அத்துறையில் குறிப்பிடத்தகுந்த வகையில் இந்தியப் பேரரசு செய்துள்ளது ஒன்றுமில்லை என்றே கூற வேண்டிய நிலையில் தான் இருந்து வருகிறது.

மேற்கொள்ள வேண்டிய அளவிற்கு இங்கு பெரிய நீர்த்தேக்கங்களோ, அணைக்கட்டுகளோ இனி அறவே கிடையாது என அமைச்சர்களோ விடாது அறிவித்து வருகிறார்கள். சிறிய சிறிய நீர்ப்பாசன திட்டங்களில் கருத்து செலுத்த வேண்டிய கட்டாயத்தில் தாங்கள் இருப்பதாகவும் அமைச்சர்கள் பன்னிப் பன்னிப் பேசியும் வருகிறார்கள்.

திராவிடத்தின் இயற்கை அமைப்பு, திராவிடத்தின்பால் இந்தியப் பேரரசு கொண்டிருக்கும் வெறுப்புணர்வை மறைத்துக்கொள்வதற்கு, அரியதோர் முகமூடியாக அமைந்துவிட்டது. இந்தியப் பேரரசின் வெறுப்புணர்வை திராவிட மக்களின் கண்ணிலும் கருத்திலுமிருந்து மறைப்பதற்காக, இயற்கை அமைப்பின் அலங்கோலத்தை முக்கியப்படுத்தி, மிகைபடக் கூறியும் வருகின்றனர் நமது அமைச்சர்கள்.

தென்னாட்டு இயற்கை அமைப்பு இடமளிக்குமானால், நீர்த் தேக்கத் திட்டங்களையும், அணைக்கட்டு [illegible]களையும், எப்பொழுதோ இந்தியப் பேரரசு வெற்றிகரமாக முடித்துத் தந்திருக்கும்; இயற்கையில் இடமில்லாததால்தான் இந்தியப் பேரரசும் செய்வதின்னது என்று அறியாது திகைத்திருக்கிறது எனத் திராவிட மக்கள் மயங்க வேண்டும் என்பதற்காகவே, நமது காங்கிரஸ் அமைச்சர்கள், விடாது ஒரே குரலில் அதையே ஊதி வருகிறார்கள் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

மேற்கொள்வதற்கான பெரிய திட்டங்கள்தான் இல்லையே, குறைந்த செலவில் நிறைவேற்றப்பட வேண்டியிருக்கும் சிறிய திட்டங்களுக்குத்தான் முதலிடம் கொடுத்து, உடனே முடித்துவிடுவோம் என்றப் பெருங்குணம் இந்தியப் பேரரசிற்கு இதுவரை ஏன் ஏற்படவில்லை என்ற கேள்வி தங்கள் சாமர்த்தியமான பேச்சிலிருந்துகிளம்பக்கூடுமே, அதற்கு என்ன பதிலளிப்பது என்பது பற்றி அமைச்சர்கள் சிந்தித்ததாகவே தெரியவில்லை. சிந்தித்திருந்தால், திராவிடத்தின் இயற்கையின் மீது பழியைச் சுமத்தி, திராவிட மக்களுக்கு இந்தியப் பேரரசு வேண்டுமென்றே செய்துவரும் தீமைகளை, திராவிட மக்களின் கண்களிலிருந்து மறைக்கப் பார்க்கும் பணியினை நமது அமைச்சர்கள் செய்ய முன்வந்திருக்கமாட்டார்கள்.

விவசாய நாடான திராவிடத்தைத் தொழில் மயமாக்கி, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த இதற்குள்ளாக இந்தியப் பேரரசு முன்வந்திருக்க வேண்டும். அந்த நற்செயலை, இந்தியப் பேரரசு இதுவரை செய்யவில்லை — வேண்டுமென்றே செய்யத் தவறி இருக்கிறது.

அதே காலத்தில் வட மாநிலங்களில் நானாவிதமான தொழில்களைத் துவங்கி, அங்குள்ள மக்களின் வேலையின்மையைக் கணிசமாகப்போக்கி, கூடுமானவரை நல்வாழ்வையும் தந்திருக்கிறது; எதிர்கால வளர்ச்சிக்கு நல்லதோர் வித்துமிட்டிருக்கிறது.

நீர்த் தேக்கங்கள் அமைக்கவும், அணைகள் எழுப்பவும், பெரும் நீர் நிலைகள் திராவிடத்தில் இல்லவே இல்லை எனக் கூறிக்கொண்டு, பக்ரா-நங்கல் நீர்த் தேக்க—அணைக்கட்டு திட்டம், கோசி திட்டம், தாமோதர் பள்ளத்தாக்கு திட்டம், ஹிராகுட் திட்டம், போன்ற பெரும் பெரும் திட்டங்களை, கோடிக்கணக்கான பணச் செலவில், வடநாட்டில் நிறைவேற்றுவதில் இந்தியப் பேரரசு முனைந்திருக்கிறது. இவைகளால், வடநாட்டு விவசாயம் வளம்பெற வசதி கிடைக்கிறது.

இலட்சக்கணக்கான ரூபாய் செலவில், வெற்றிகரமாக முடித்து, திராவிடத்தின் விவசாயத்தை வளமாக்கும் பணியினை மேற்கொள்ளாது, இந்தியப் பேரரசு இருந்துவந்திருக்கிறது; இனி மேற்கொள்ள இருக்கிறது என, இங்குள்ள அமைச்சர்கள் ஆரவாரம் செய்துவருகின்றனர்!

தொழில்களைத் துவங்காது, திராவிடத்தைத் தேம்பவிட்டிருக்கிறது இந்தியப் பேரரசு!

விவசாயத்திற்கு இன்றியமையாதத் தேவைகளாக உள்ள சிறுசிறு நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றுது விடுத்து, விவசாயத்தையே நம்பி வாழும் திராவிட மக்களைக் கண்கலங்க வைத்திருக்கிறது, இந்தியப் பேரரசு!

அதே நேரத்தில், வடநாட்டில் பெரும் நீர்த் தேக்கங்களை அமைத்து, அங்குள்ள விவசாயிகளுக்கு வாழ்வு கொடுத்திருக்கிறது, இந்தியப் பேரரசு!

ஏராளமான தொழில்களையும் துவங்கி, அங்குள்ளார் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தியும் இருக்கிறது, இந்தியப் பேரரசு!

இங்குள்ள அமைச்சர்களோ, கட்டி மடக்க வேண்டிய காறு கிடையாது—மடை போட்டுத் தடுத்துப் பயன்படுத்த வேண்டிய மலையருவி கிடையாது—எனவேதான், இந்தியப் பேரரசு திராவிடநாடு பற்றி ஏனோதானோ என்று இருந்துவருகிறது—என, தங்கள் இளிச்சவாய் போக்கிற்குக் கட்டியம் கூறிக் கொண்டு பவனி வருகிறார்கள்!

'பிற மத நிதியில் பங்குகேட்காத அரசாங்கம் இந்து மத நிதியில் பங்கு கேட்கலாமா?'

சட்டத்தின் இடுக்கில்சுயநலத்தைக் காப்பதில் குன்றக்குடியார் தீவிரம்!

"இந்து மதக் கோயில்களில் இருக்கின்ற உபரி நிதியில் ஒரு பங்கைக் கேட்கின்ற சர்க்கார், அதைப்போல மற்ற மதத்தினரிடமிருக்கும் உபரிப் பணத்தில் ஏன் பங்கு கேட்கவில்லை? அப்படிப்பட்ட முறையில் நமது சர்க்காரை எப்படி ஒரு 'மதச் சார்பற்ற' சர்க்காராகக் கூற முடியும்? இந்துக் கோயில்களிலிருந்து பணம் வசூலிப்பதுபோல் கிறித்துவக் கோயில்களிலிருந்தும் ஏன் பணம் வசூலிக்கப்படவில்லை என்னும் பிரச்சினை உண்மையிலேயே ஆச்சரியப்படக்கூடியதாக இருக்கிறது."

—இவ்வாறு, தேவகோட்டைக்கருகில் உள்ள சண்முகநாதபட்டிணத்தில், நல்லகருப்பன் கல்வி நிலையத்தின் மூன்றாவது ஆண்டு விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசிய குன்றக்குடி அடிகளார் குறிப்பிட்டிருக்கிறார்.

"மத நிறுவனங்களிடமிருந்து பிரிக்கப்பட்டு சேர்க்கப்பட்ட பல இலட்ச ரூபாய்களை, சர்க்கார், இந்து மதத்தின் அபிவிருத்திக்காகவாவது உபயோகிக்காமல் இருப்பது வேதனையையே தருகிறது. இந்து மத நிலையங்கள் தனியாக உருமனையைஅரிசனங்களுக்கு வீடு கட்டிக்கொள்வதற்கென வழங்குகின்றபோது, 'அது எப்படிச் செல்லும்?' என்று சர்க்கார் கேட்கும்போது, கிறித்துவப் பாதிரிமார்கள் அரிசனங்களுக்குப் பல வீடுகளைக் கட்டிக் கொடுப்பதில் எவ்விதத் தடையுமில்லாமல் இருப்பது வியப்பிற்குரிய ஒன்றாகும். எனவே, இந்து மத சட்டங்கள் பல இயற்றப்பட்டாலும், அதை அமுலாக்கும் பொறுப்பு மடங்களிடமே விடப்பட வேண்டும்,"

என்றும் அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

கொலை செய்யப்பட்ட லியாகத் அலிகான்

கொலைக்காரனை எவரும் ஏவவில்லையாம்

கராச்சி, ஜூன் 25—

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் லியாகத் அலிகானைக் கொலை செய்வதற்காக யாருமே எதிரி சையீத் அக்பரை ஏவிவிடவில்லை என்றும், முஸ்லிம் பெண்கள் 'பர்தா' வழக்கத்தைப் பின்பற்றாதது குறித்து சையீத் அக்பர் கவலை கொண்டதே கொலைக்குக் காரணமாக இருக்கலாம் என்பதற்கு ஆதாரம் இருப்பதாகவும், லியாகத் கொலை நிகழ்ச்சி பற்றி விசாரிப்பதற்காக வரவழைக்கப்பட்ட பிரிட்டிஷ் துப்பறியும் நிபுணர் ஒருவர் தமது அறிக்கை ஒன்றில் வெளியிட்டிருக்கிறார்.

லியாகத் அலிகானைக் கொலை செய்வதற்காக 7 சதித் திட்டங்கள் நடைபெற்றன என்று கூறப்பட்டதையெல்லாம் அந்த துப்பறியும் நிபுணர் மறுத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

கொலைக் குற்றத்தில் சந்தேகம் கொள்ளப்பட்ட மேற்படி சையீத் அக்பர் என்பவர், ஒரு தடவை, லியாகத் அலிகான் ஒரு இடத்தில் சொற்பொழிவாற்றுகையில், அவரது மனைவியரான பேகம் லியாகத், 'பர்தா' இல்லாமல் உட்கார்ந்திருப்பதைக் கண்டு வெகுண்டதாகவும், கூட்டம் முடிவுற்றதும், தமது வீட்டிற்குச் சென்ற சையீத் அக்பர் தனது மனைவியிடம், அந்த சமயத்தில் மட்டும் தம்மிடம் துப்பாக்கி இருந்தால் லியாகத் மனைவியைச் சுட்டுக் கொன்றிருக்கலாம் என்று கூறியதாகவும், அந்த நிபுணர் தமது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மத்திய டிராக்டர் நிறுவனம் 1954 ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை திருத்திப் பண்படுத்தியுள்ள காஸ் கோரை அடர்ந்த பிரதேசத்தின் விஸ்தீரணம் 1¼ இலட்சம் ஏகராகும்; அதே காலத்தில், அந்த நிறுவனம் திருத்திப் பண்படுத்தியுள்ள காட்டுப் பிரதேசத்தின் விஸ்தீரணம் 3,891 ஏகராகும்.

1954—55-ம் ஆண்டில் இந்தியாவிலிருந்து, மொத்தம் சுமார் ரூ. 10½ கோடி மதிப்புள்ள 7,26,300 மணங்கு அரக்கு வகைகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. 1953—54-ம் ஆண்டில், ரூ 670 லட்சம் மதிப்புள்ள 7,32,000 மணங்கு அரக்கு ஏற்றுமதியாயிற்று.

நகரங்களில் குடியிருப்புப் பிரச்சினை

ரூ. 1,250 கோடி வேண்டுமாம்

சிம்லா, ஜூன் 28—

"1956—முதல் 1961 வரையிலுமுள்ள ஐந்தாண்டு இடைக் காலத்தில் நகரங்களில் உள்ள குடியிருப்பு பிரச்சினையைத் தீர்க்கக் குறைந்த பட்சம் 93-லட்சம் வீடுகள் கட்டவேண்டியிருக்கும்; அதற்கு எவ்வளவு குறைவாக மதிப்பிட்டாலும் ரூ. 1,250 கோடி செலவாகும்" என்று மத்திய சர்க்கார் நீர் விநியோக, மராமத்து, குடியிருப்பு அமைச்சர் சர்தார் சுவரண்சிங் கூறியிருக்கிறார்.

மேலும் அவர், கிராமாந்திரப் பகுதிகளிலுள்ள குடியிருப்பு வசதிப் பிரச்சினையின் ஓரத்தைத் தொடுவதுகூட சர்க்காரின் சக்திக்கு அப்பாற்பட்ட ஒன்று என்றும், மனித உழைப்பு இலவசமாகக் கிடைத்தாலுங்கூட இப்போது கிராமாந்திரங்களில் உள்ள 5½ கோடி வீடுகளையும் அபிவிருத்தி செய்வதற்குக் கூட ரூ 912 கோடி செலவாகும் என்றும் கூறியிருக்கிறார்.

நில விநியோகத் திட்டங்கள்

அபிவிருத்திக்கு ரூ. 30 கோடி இந்திய சர்க்கார் வழங்கும்

இந்தியா முழுவதிலுமுள்ள நீர் விநியோகத் திட்டங்களின் அபிவிருத்திக்காக மத்திய சர்க்கார் ரூ 30 கோடி அனுமதித்திருக்கிறதாம்.

இத்தொகையில் ரூ 10 கோடி இவ்வாண்டில் செலவிடப்படும் என்றும், இத்தொகையில் சென்னை மாநிலத்தின் பங்கு ரூ 1½ கோடி என்றும் சென்னை மாநில அமைச்சர் எஸ் எஸ். இராமசாமி தெரிவித்திருக்கிறார்.

கடலில் கலக்கும் ஆற்று நீர்....

பாசனத்திற்கு பயன்படுத்தும் யோசனை பற்றி காமராசர்

"மேற்குத் தொடர்ச்சி மலைகளில் உற்பத்தியாகி, திரு-கொச்சி மாநிலத்ினூடே பாய்ந்து அரபிக் கடலில் கலக்கும் நதிகளில் செல்லும் உபரித் தண்ணீரை, தமிழ்நாட்டை வளப்படுத்த உபயோகிப்பது குறித்து சென்னை—திரு-கொச்சி மாநில சர்க்கார்களிடையே விரைவில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகும்,"

என்று, சென்னை முதலமைச்சர் காமராசர் விருதுநகரில் நடைபெற்ற ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா ராயத்துக்கள் மாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

அந்த மாநாட்டில் பேசிய அவர் தொடர்ந்து குறிப்பிட்டதாவது:—

"உழுபவனுக்குப் போதிய பாதுகாப்பு அளிக்க வேண்டியது அவசியமே; நில உடைமைக்கு வரம்பு ஏற்படுத்த வேண்டும் என்பது போல் செல்வத்திற்கும் வரம்பேற்படுத்த வேண்டும் என்றும் சொல்லப்படுகிறது; அது அவசியம் என்று காணப்பட்டால் சர்க்கார் அதையும் செய்து முடிக்கும்; நிலச் சீர்திருத்தம் செய்யப்பட்டாலும் கூட எல்லோருக்கும் நிலம் தந்து விட முடியாது; என்றாலும் ஒருவரே 4,000 ஏகர் நிலம் வைத்துக் கொண்டிருப்பதையும் 'சகித்து'க் கொண்டிருக்க முடியாது."

பாலாறு தண்ணீர் பற்றி பேச்சு வார்த்தை

பதில் எதிர்பார்க்கப்படுகிறதாம்!

பாலாறு நதித் தண்ணீரை பகிர்ந்துகொள்வது சம்பந்தமாகப் பூர்வாங்கமான பேச்சுவார்த்தைகளை எப்போது நடத்துவது என்பது குறித்து சென்னை சர்க்கார் மைசூர் சர்க்காரிடம் கேட்டுள்ளதாகத் தெரிகிறது.

இதற்கு மைசூர் மாநில சர்க்காரிடமிருந்து இன்னும் பதில் எதுவும் வரவில்லை என்றும், ஆயினும் எந்தச் சமயத்திலும் அவர்களுடைய பதிலை எதிர்பார்க்கலாம் என்றும் சென்னை ரெவின்யூ அமைச்சர் மாணிக்கவேலர் கூறியிருப்பதாகவும் தெரிகிறது.

நகரில் சேரி அபிவிருத்தி திட்டத்திற்கு ரூ. 2½ இலட்சம்

சென்னை, ஜூன் 27—

புலியூர் (கோடம்பாக்கம்) பகுதியில் வசிக்கும் சேரி மக்களின் குடியிருப்புக்காக புலியூர் திட்டத்தின் இரண்டாம் பாகத்தின் கீழ் ரூ.-2½ லட்சம் செலவில் சுமார் 34-ஏகரா மனைக் கட்டுகளை வாங்குவதென சென்னை நகர அபிவிருத்தி டிரஸ்ட் தீர்மானித்திருக்கிறதாம்.

இலவசமாக பள்ளிக் குழந்தைகளுக்கு பகல் உணவு தரும் திட்டம்; சர்க்கார் பரிசீலிக்கிறதாம்

வைத்திய பரிசோதனையும் கட்டாயமாகுமா?

சென்னை. ஜூன் 26—

துவக்கப் பள்ளிகளில் கல்வி பயிலும் குழந்தைகளின் தேக நலனை வளப்படுத்துவதற்கான ஆலோசனைகளை சென்னை சர்க்கார் ஆராய்ந்து வருகிறது.

மேலும், ஒவ்வொரு ஆண்டிலும் சுமார் ஒரு இலட்சம் குழந்தைகளுக்கு நடுப்பகல் உணவு இலவசமாக வழங்குவது பற்றிய யோசனையை சர்க்கார் பரிசீலனை செய்து வருவதாகவும் கூறப்படுகிறது.

சென்னை மாகில வைத்திய இலாகா அதிகாரிகள், 'துவக்கப் பள்ளிகளில் கல்வி பயிலவரும் குழந்தைகளில் கால்பாகத்தினருக்கு மேல் போதிய உணவு பெறுதவர்களாக இருப்பவர்கள்,' என்று மதிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்த விஷயத்தில் சர்க்காரும், தல நிர்வாகத்தினரும் அக்கரை எடுத்துக்கொண்டு, நிலையைச் சீர் செய்ய ஏதேனும் செய்ய வேண்டும்,' என்று வைத்திய இலாகா கருதுகிறதாம்.

மற்றும், இடைநிலைப் பள்ளிகளில் பயிலும் எல்லா மாணவர்களுக்கும் வைத்திய பரிசோதனையைக் கட்டாயமாக்கும் திட்டம் ஒன்றையும் சர்க்கார் பரிசீலித்து வருவதாகத் தெரிகிறது.

துவக்கத்தில் சென்னை நகரிலும், ஏழு ஈவட்டங்களிலும் சில தாய்—சேய்நல விடுதிகளில் கட்டாய வைத்திய பரிசோதனை பரீட்சார்த்தமாக நடைபெறும்.

பரிசீலிக்கப்படும் இத்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டால் இந்த மாகிலத்திற்கான இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படுவதற்கான வாய்ப்பு ஏற்படும் என்று தெரிகிறது.

கால்நடை இன்ஷ்யூரன்ஸ் திட்டம்

ரூ. 2½ லட்சம் செலவில் மேற்கொள்ளப்படுகிறது

சென்னை சர்க்கார், கால்நடை 'இன்ஷ்யூரன்'சுக்கான ஒரு பரீட்சார்த்தத் திட்டத்தைப் பரிசீலித்து வருவதாகவும், இத்திட்டத்திற்கு ரூ. 2½ லட்சம் செலவாகலாமென்றும், இத்திட்டம் அமுல் நடத்தப்பட்டால் சென்னை மாகில கால்நடைகளை நீடித்துக் காப்பாற்ற வழிவகைகள் ஏற்படுமென்று கால்நடை மருத்துவ இலாகா அதிகாரிகள் நம்புவதாகவும் கூறப்படுகிறது

இத்திட்டத்தையொட்டி மிருக மருத்துவக் கல்லூரியில் அனுமதிக்கப்படும் மாணவர்களின் தொகையை அதிகரிக்கவும், இரண்டாண்டுக் காலத்திற்குள் அவர்களுக்கு கால்நடை மருத்துவ முறையினைக் கற்றுத்தருவதற்கான குறுகிய காலப் பயிற்சி வகுப்புகளை ஆரம்பிக்கவும் உத்தேசமிடப்பட்டு பரிசீலனையில் இருந்து வருவதாகவும் தெரிகிறது.

இவை தவிர, சென்னை நகரிலுள்ள மிருக மருத்துவக் கல்லூரியை அபிவிருத்தி செய்யவும், மிருக உணவு, வளர்ப்பு சம்மந்தமாக 'போதனு ஆராய்ச்சிக் கழகம்' ஒன்றையும் நிறுவுவது குறித்து சர்க்கார் யோசித்து வருகிறதாம்.

மேலும், விஷம் சம்மந்தமான சிகிச்சை, நோய்த்தடுப்பு ஆகியவற்றிற்குத் தனித்தனிப் 'பிரிவு'கள் ஏற்படுத்துவதெனவும், இதற்கான தனித்தனி கட்டிடங்களைக் கட்டி, இதர வசதிகளைச் செய்து தரவும் ரூ 2¼ லட்சம் செலவிடக்கூடிய மற்றொரு யோசனையும் சர்க்காருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

மேற்கண்ட இத்திட்டங்கள் அனைத்தும் அங்கீகரிக்கப்பட்டால், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அவை சேர்த்துக் கொள்ளப்படும் என்றும் கூறப்படுகிறது

ஆலை தொழிலாளருக்கு குடியிருப்பு வசதி

மத்திய சர்க்காரின் சிபாரிசுகள்

ஆலைத் தொழிலாளர் குடியிருப்பு வசதிக்காக ரூ 25 கோடி ஒதுக்கவேண்டுமென திட்டக் குழுவினருக்கு மத்திய அரசாங்க குடியிருப்பு வசதி இலாகா மந்திரி ஏற்கனவே சிபாரிசு செய்திருக்கிறாராம்.

குறைந்த வருமானக்காரர்களுக்குக் குடியிருப்பு வசதி தர ரூ. 50 கோடி தேவை என்றும் அவர் கோரியுள்ளார் எனக் கூறப்படுகிறது.

மாகில குடியிருப்புவசதி இலாகா மந்திரிகள் மாநாடு அடுத்த மாதம் சிம்லாவில் நடைபெறும்போது இதுபற்றியும் தனி இலாகா ஏற்படுத்துவது பற்றியும், நிதி நிறுவனங்களைத் தோற்றுவிப்பது பற்றியும் யோசனை செய்யப்படும் என்று தெரிகிறது.

கோவை விவசாயக் கல்லூரி அபிவிருத்தி

ரூ. 40 இலட்சம் செலவில் சென்னை சர்க்கார் திட்டம்?

கோவையிலுள்ள விவசாயக் கல்லூரியையும், விவசாய ஆராய்ச்சிக் கழகத்தையும் அபிவிருத்தி செய்வது சம்மந்தமான சில திட்டங்களைச் சென்னை சர்க்கார் பரிசீலித்து வருவதாகத் தெரிகிறது இத்திட்டத்திற்காக ரூ 40 லட்சம் செலவாகுமென்று கூறப்படுகிறது.

சென்னையில் வருகிற ஜூலை திங்கள் 18-ந் தேதி முதல், மாகிலத்தில் உள்ள இளம் விவசாயிகளுக்கு குறுகிய கால விவசாயப் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படும் என்றும், அந்தப் பயிற்சி மொத்தம் 6 மாத காலத்திற்கே தரப்படும் என்றும் கூறப்படுகிறது.

இப்பயிற்சி இலவசமாக அளிக்கப்படுவதுடன், பயிற்சியாளருக்கு மாதம் ரூ 20 தரப்படும் என்றும், விவசாய சம்மந்தமான பாடங்கள், பயிற்சிகள் அனைத்தும் தமிழிலேயே கற்றுத் தரப்படும் என்றும் தெரிகிறது.

1,20,000 பஞ்சாலைத் தொழிலாளர் நிலைமை

தகராறுகளைத் தீர்ப்பதற்கு புதிய ஏற்பாடு

ஆமதாபாத் பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத்திற்கும்—பஞ்சாலை அதிபர்கள் சங்கத்திற்கும் இடையே ஏற்பட்டுள்ள ஒரு ஒப்பந்தத்தினுல், 1,20,000 தொழிலாளர்களின் போனஸ் பிரச்சினை தகராறு ஒரு முடிவுக்கு வருமெனத் தெரிகிறது.

இந்த ஒப்பந்தத்தினுல், இப்போது தொழில் கோர்ட்டுகளில் முடிவடையாமல் இருந்துவரும் தொழில் தகராறு வழக்குகள் திரும்பப் பெறப்படும் என்று கூறப்படுகிறது.

போனஸ் பிரச்சினையைத் தீர்க்க ஐந்தாண்டு ஒப்பந்தமும், எல்லா தொழில் தகராறுகளையும் பரஸ்பர நடுநிலை நிறுவனத்தின் மூலமாகத் தீர்த்துக் கொள்வது என்ற இரண்டாண்டு ஒப்பந்தமும் அதன் அம்சங்களாகும்.

கம்யூனிஸ்டுகளின்

சுய சிந்தனையற்ற போக்கு

சென்ற ஆண்டு கண்டனம்: இந்தஆண்டு வரவேற்பும் வாழ்த்தும்?

பண்டித நேருவின் தலைமையில் உள்ள இந்தியப் பேரரசு கடைப்பிடித்துவரும் வெளிநாட்டுக் கொள்கையை கம்யூனிஸ்டுகள் ஆதரிக்கக்கூடும் என்றும் கூறப்படுகிறது.

கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் இதுபற்றி ஆலோசித்ததாயும், அடுத்து நடைபெறவிருக்கும் கட்சி மாநாட்டில் நேருவின் வெளிநாட்டுக் கொள்கையை ஆதரிக்குமாறு தீர்மானம் நிறைவேற்ற குழு சிபாரிசு செய்யலாம் என்றும் கூறப்படுகிறதாம்.

சென்ற ஆண்டு மதுரையில் நடைபெற்ற கட்சி மாநாட்டில், 'பண்டிதரின் வெளிநாட்டுக் கொள்கை இரு வல்லரசு அணிகளுடன், சந்தேகத்திற்கிடமான வகையில் நடத்தப்படும் நாடகம்,' என்ற வர்ணனையுடன் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றி அதன்படி இன்றுவரை வெளிநாட்டுக் கொள்கையைக் கண்டித்து வருபவர்கள் நமது கம்யூனிஸ்டு கட்சியினர்!

செய்திப் பத்திரிகைகளைப் படிப்பதில்லையாம்!

மக்கள் சபைத் தலைவர் மாவலங்கர் கூறுகிறார்

புனு, ஜூன் 25—

"கடந்த சில காலமாகவே இந்திய செய்தித் தாள்களைப் படிக்கும் பழக்கத்தை நிறுத்திக்கொண்டு விட்டேன்; செய்தித் தாள்களில் வரும் செய்திகளில் 4-ல் 1 பங்கு சர்க்கார் செய்துள்ள வேலைகள் பற்றி வெளிவரும்; எஞ்சிய 3 பகுதி செய்திகளும் எதிர்க் கட்சியினரைத் தாக்குவதாகவே இருக்கும்; இந்த இரண்டிலும் முன்னையது எனக்குத் தெரிந்த ஒன்று — அடுத்தது எனக்குத் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமற்றது; எனவேதான் நான் இந்திய செய்திப் பத்திரிகைகள் படிக்கும் பழக்கத்தை விட்டு விட்டேன்."

இவ்வாறு, இந்தியமக்கள் சபைத் தலைவர் மாவலங்கர் கூறியிருக்கிறார்!

"ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் கட்சியைக் குறை கூறுவதிலேயே 'கண்ணும் கருத்து'மாக இருந்து வரும் எதிர்க் கட்சியினர், உருப்படியான திட்டங்களைக் கூறும் காலமும் வரக்கூடும்" என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

நைலான் உடை: ஒரு எச்சரிக்கை!

நியூயார்க், ஜூன் 26—

காற்றில் கந்தக அமிலப் புகை கலந்து விடும்போது, 'நைலான்' ஆடைகளை அவை தாக்கி, துணியைத் தூளாக்கிவிடும் என்றும் துணி அணிந்திருக்கும் பெண்களின் மானம் பறிபோக வேண்டியிருக்கும் என்றும், வாரா சாபின் என்ற அம்மையார் கூட்டமொன்றில் எச்சரித்திருக்கிறார்.

கந்தக அமிலப் புகையினின்றும் காற்றைச் சுத்தப்படுத்த வேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டாராம்.

'பெண்கள் இப்போது அநேகமாக நைலான் ஆடைகளையே அணிகின்றனர்; எனவே, இது அவசியம்', என்றாராம்.

சென்ற ஆண்டு இப்புகையினுல் தானும், இதர பெண்களும் அணிந்திருந்த செருப்பு பொடிப் பொடியாகி விட்டனவென்றும் அவர் உதாரணம் கூறினாராம்.

கடும் பிரச்சினையாக ஆகிவிட்டதாம்!

தகவல் தருவோருக்கு சன்மானம் தரப்படுமாம்!

லைசென்சு இல்லாமல் ரேடியோ செட்டுகளை வைத்திருப்பவர்கள் அல்லது உபயோகித்து வருபவர்களைப் பற்றித் தகவல் அறிவிப்போருக்கு, தக்க சன்மானம் வழங்குவதென்று இந்திய சர்க்கார் தபால் - தந்தி இலாகா முடிவு செய்திருக்கிறது.

"லைசென்சு இல்லாமல் ரேடியோ செட்டுகளை வைத்திருப்பதும், அவைகளை உபயோகிப்பதும் பெருகி, மிகக் கடுமையானதொரு பிரச்சினையாகிவிட்டது. லைசென்சு இல்லாத ரேடியோ செட்டுகள் மலிந்திருப்பதன் காரணமாக, சர்க்காருக்கு, ஆண்டுதோறும் ரூ. 15 லட்சம் முதல் ரூ 30 லட்சம் வரை நஷ்டமேற்பட்டு வருகிறது," எனவும் குறிப்பிடப்படுகிறது.

'தலைமை ஏற்க வாரீர்'

ஜெயப்பிரகாசுக்கு அழைப்பு

இந்திய சோஷலிச இயக்கத்திற்கு ஜெயப்பிரகாஷ் நாராயணனின் தலைமை தற்போது அவ்வியக்கத்தின் இன்றியமையாத தேவையாகவும், எனவே, அவர் திரும்பவும் பி. சோ. கட்சியில் 'தீவிர' பங்கேற்றுக்கொண்டு தலைமை தாங்கி அதனை நடத்தவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு தமிழ் நாடு ம. சோ. கட்சியின் நிர்வாகக் குழுவினரும் மற்றும் 100 கட்சி உறுப்பினர்களும் சேர்ந்து ஜெயப்பிரகாஷ் நாராயணனுக்கு தந்தி கொடுத்துள்ளதாகப் பத்திரிகைச் செய்தி ஒன்றின்வாயிலாகத் தெரிய வருகிறது.

விவசாயிகளுக்கு உயர்ந்த ரக விதைகள்

செங்கற்பட்டு மாவட்டத்தில் புதிய திட்டம் ஆரம்பம்

எல்லா விவசாயிகளுக்கும் உயர்ந்த ரக விதைகள் கிடைக்கச் செய்வதற்கான விதைகள் உற்பத்தித் திட்டமொன்று செங்கற்பட்டு மாவட்டத்தில் வெகு விரைவிலேயே ஆரம்பிக்கப்பட இருக்கிறதாம்.

ஒவ்வொரு கிராமத்திலும் சாகுபடியில் இருந்துவரும் நிலத்தில் 2 சதவிகித நிலத்துக்கு கிராம விதைகளை மாற்றிக்கொண்டு, அதற்குப் பதில் அபிவிருத்தி செய்யப்பட்ட விதைகள் தரப்படுமாம். மேற்கண்ட இத்திட்டத்தில், கிடைத்த மகசூலை, 5 சதவிகிதத்திற்கு மேல் இலாபமில்லாமல் மற்ற விவசாயிகளுக்கு அவர்கள் தரவேண்டும் என்ற ஒரு நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளதாம்.

தீவிர சாகுபடிக்கு ரூ. 21 லட்சம்

தஞ்சை மாவட்டத்தில் தீவிர சாகுபடி திட்டத்தின்கீழ் சர்க்கார், ரூ. 21 லட்சம் அனுமதித்துள்ளதாகத் தெரிகிறது. இத்தொகையிலிருந்து ரயத்துக்களுக்கு உரம், அபிவிருத்தி செய்யப்பட்ட விதை ஆகியவை வாங்குவதற்கென கடன் தொகை தரப்படுமாம்.

இக்கடன் திட்டப்படி ஒரு ரயத்துக்கு, ஏகர் ஒன்றுக்கு ரூ. 35, அல்லது நபர் ஒன்றுக்கு உயர்ந்த பட்சம் ரூ. 500 கடனுதவப் பெறலாம் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

'எளிமை — இனிமையற்ற கலைச் சொற்கள்'

'தென்னுட்டவர் எதிர்ப்பு அலட்சியப்படுத்தப்படுகிறது'

இந்தியப் பேரரசின் ஆணவப் போக்கு

புதுடில்லி, ஜூன் 24—

சர்க்கார் அலுவலக வட்டாரங்கள் சம்பந்தமாக இந்தி மொழியை நாட்டினரிடையே கட்டாயமாகத் திணிப்பதில், அது குறித்துத் தென்னுட்டில் எழும்பியுள்ள எதிர்ப்புகளையும் பொருட்படுத்தாமல், அதை, விருப்பமில்லாதவர்கள் மீது மேலும் 'வன்மையாக'த் திணிக்க இந்திய சர்க்கார் முயன்று வருகிறது.

நடுநிலைப் பள்ளிகளைப் பொறுத்த மட்டில், பௌதிகம், இரசாயனம், கணிதம், தாவர இயல், சமூகப் பாடம் ஆகிய ஐந்து பாடங்களில் இந்திச் சொற்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

"இந்த நடவடிக்கையை 'இந்திக் காவடி'ப் பேர்வழிகள் வரவேற்ற போதிலும், மத்திய கல்வி இலாகா, பொது மக்களுக்காக இறுதியாக வெளியிட்டுள்ள இவை, நடுநிலை பள்ளி மட்டத்தைப் பொறுத்த அளவில் மிகக் கடினமானவையாகப்படுகிறது என்பதே ஆசிரியர்களுடையவும், கல்வித் துறை நிபுணர்களுடையவும் கருத்தாகும்'

"கல்லூரிவகுப்புகளுக்கெனதயாரிக்கப்பட்டுள்ளவையோ இதனினும் கடுமையாகவே கருதப்படுகின்றன இவை, பொதுமக்களின் காதுகளுக்குக் 'கர்ண கடூரமா'க இருக்கின்றனவாம். அதுதவிர, இளங் குழந்தைகளின் நாக்குகள் இவற்றை உச்சரிக்க உற்றபடி வளைந்துகொடுப்பதுமில்லை.

"இலகுவான சொற்களை எளிதில் உச்சரிக்கக் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுப்பதே சிறந்தது; என்பதுதான் மொழி அறிவாளரின் ஒருமித்த கருத்தாகும்

"ஆங்கிலச் சொற்களுக்கு இணையான இந்தி மொழிச் சொற்களை ஆக்கியவர்கள் எளிமையையும், இனிமையையும் அறவே மறந்து விட்டார்கள் போலும்!"

—'தின மலர்'

பிரச்னைக்கு பரிகாரம் தேடாவிட்டால் 'லங்காஷயர் சுடுகாடாகும்'

பிரிட்டன் நெசவாளர் சங்கம் எச்சரிக்கிறது

லண்டன், ஜூன் 22—

"பிரிட்டனிலுள்ள பஞ்சாலைத் தொழிலுக்குத் தற்போது நேர்ந்துள்ள பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காணுவிட்டால், இன்னும் ஐந்து ஆண்டுகளில் லங்காஷயரிலுள்ள பஞ்சாலைகள் 'சுடுகாடு'களாகிவிடும்,"

என்று, பிரிட்டன் நெசவுத் தொழிலாளர் சங்கப் பொதுச் செயலாளர் ஒரு அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறாராம்.

அந்தப் பஞ்சாலைகளிலிருந்து தொழிலாளர்கள் கொஞ்சம் கொஞ்சமாக வெளியேற ஆரம்பித்து விட்டனர் என்றும், ஏற்கனவே சென்ற ஆண்டில் 10,000 தொழிலாளர்கள் வேலையினின்றும் விலகிக்கொண்டனர் என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர், பிரிட்டனின் ஏற்றுமதிகள் குறைந்துகொண்டு வருகின்ற அதே நேரத்தில் அழகிய சன்னத் துணிமணிகளின் இறக்குமதி அதிகரித்துக்கொண்டு வருவதாகவும் தெரிவித்திருக்கிறார்.

‘இலங்கை இந்தியத் தூதுவராக ஒரு தமிழரே இருக்கவேண்டும்’

‘ஆங்கில மொழியை தொடக்கப் பள்ளியிலும் போதிக்க வேண்டும்’

தி. மு. கழகத்திற்கு பி. டி. இராஜன் வேண்டுகோள்

மதுரை, ஜூன் 26—

“திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தமிழ் மொழிக்குத் தொண்டு செய்கிறார்கள். அதற்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன்;

“தமிழ் நாட்டில் தொடக்கக் கல்வி முதலே தமிழ் மொழியையும், ஆங்கிலத்தையும் கற்றுத் தர வேண்டுமெனக் கோரி திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கிளர்ச்சி செய்யவேண்டும் என்று அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்,’

—என்று, மதுரைத் தமிழ் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற சிறப்புக் கூட்டமொன்றில் பேசுகையில், பி. டி. இராஜன் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்.

மதுரை தமிழ்ச் சங்கத்தின் பொன் விழாக் குழுத் தலைவரும், சென்னை சட்டசபை உறுப்பினருமான அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

“எந்த மொழியில் பாடம் புகட்டினாலும் அறிவு வளர்ச்சி ஏற்படுமென்பதில் ஐயமில்லை; வெறும் அறிவு வளர்ச்சி மட்டுமே கல்வியாகாது; ஒழுக்கத்தையும் வளர்ப்பதுதான் சிறந்த கல்வியாகும்; எனவே, ஒழுக்கத்தையூட்டும் கல்வி கற்பிக்க வேண்டுமானால் தமிழ் நாட்டில் தமிழில்தான் கல்வி கற்பிக்கப்பட வேண்டும்.

“ஆனால் தமிழிலேயே கல்வி கற்பிக்க வேண்டும் என்று சொல்லும்பொழுது, ஆங்கிலத்தைப் புறக்கணித்துவிட்டதாகக் கொள்ளக்கூடாது; ஆங்கிலத்தையும் தொடக்கத்திலிருந்தே கற்பிக்க வேண்டும்.”

கல்வித்துறையைப் பற்றிக் குறிப்பிடுகையில் அவர் கூறியதாவது:—

“கல்வித் துறையை அரசியல்வாதிகள் விளையாட்டுப் பொம்மையாகக் கருதி விளையாடுகின்றனர்; இது வருங்கால இளைஞர்களின் வாழ்வைப் பாழ்படுத்திவிடும்; கல்வித் துறையை கல்வி நிபுணர்களிடமே ஒப்படைத்துவிட்டு, அரசியல்வாதிகள் ஒதுங்கிக்கொள்வது சாலவும் சிறந்ததென்று கருதுகிறேன்.”

வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் நிலைமையை விளக்கிய திரு. பி. டி. இராஜன் இலங்கையைச் சுட்டிக்காட்டி குறிப்பிட்டதாவது:—

“அந்த இலங்கைத் தமிழர்களின் இன்னல்களை நன்குணர்ந்த ஒருவர் தூதுவராக நியமிக்கப்படாதது மிகவும் வருந்தத்தக்கது.”

பாட புத்தகங்கள் கோரி மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

பம்பாய் நகரசபை முன் சம்பவம்

பம்பாய் நகரிலுள்ள ஆரம்ப நகரசபைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள், தங்களுக்கு வேண்டிய பாட புத்தகங்கள் இதுகாறும் எவரிடமும் கிடைக்கப் பெறாதது குறித்துத் தங்கள் ஆட்சேபத்தைத் தெரிவிக்கும் முறையில் பம்பாய் நகரசபைக் கட்டிடத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தினராம்.

‘பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டு ஏறத்தாழ ஒரு மாதத்திற்கு மேலாகியும் இன்னும் பாட புத்தகங்கள் கிடைக்கவில்லை; இந்தக் காரணத்தால் பல பள்ளிக்கூடங்களில் பாடம் சொல்லித் தருவது நிறுத்தப்பட்டுவிட்டது; கல்வி அதிகாரிகளின் இத்தகைய ‘அசட்டை’ குறித்து விசாரணை நடத்த வேண்டும்’ என்று கோரும் மனு ஒன்று நகர மேயரிடம் தரப்பட்டதாம்.

இது குறித்து சர்க்கார் விசாரணை நடத்த வேண்டும் எனக் கோரும் தீர்மானம் ஒன்றின் மீது அதே நேரத்தில் நகரசபைக் கூட்டத்திலும் விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்ததாம்!

சர்க்கார் உதவியுடன் தொழிலாளருக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் கீழ், சென்ற மே மாதத்தில், பல்வேறு மாநில சர்க்கார்களுக்கும், தனிப்பட்ட ஸ்தாபனங்களுக்கும், இந்திய சர்க்கார் ரூ. 2,71,75,645 வழங்கியுள்ளது.

கைத்தறிக்குப் பாதுகாப்பு

முதன் மந்திரி கருத்து

கைத்தறித் தொழிலுக்கு சர்க்கார் எப்போதும் பாதுகாப்புக் கொடுத்துக்கொண்டே இருக்க முடியாதென்றும், கைத்தறித் தொழில், சுயமாக இயங்கும் தொழிலாக மாறவேண்டுமென்றும் ஸ்ரீவில்லிபுத்தூரில் நடைபெற்ற நெசவாளர்கள் மாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசிய முதலமைச்சர் காமராசர் கூறினார்.

கைத்தறி நெசவுக்குப் பாதுகாப்பளித்துவிடுவதினாலேயே கைத்தறி பிரச்சினையைத் தீர்த்துவிட முடியாதென்றும், பொதுமக்கள் விரும்பக்கூடிய மோஸ்தர் துணிகளையே நெசவாளர்கள் உற்பத்தி செய்ய வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

மேலும் அவர் பேசுகையில், நல்ல ரகத் துணிகளை நெசவாளர்கள் உற்பத்தி செய்யாவிட்டால் மக்கள் அவற்றை வாங்கமாட்டார்கள் என்றும், அவர்கள் உற்பத்தி செய்கின்ற துணி, ஆலைகளில் உற்பத்தி செய்யப்படும் துணிகளுடன் போட்டியிடக் கூடியவையாக இருக்கவேண்டுமென்றும் கூறினார்.

கல்வியில் சர்க்கார் தலையீடு அறவே கூடாது!

சௌராட்டிர மாநில கல்வி மந்திரி கருத்து

“இந்தியாவின் ஜனநாயக அரசியல் அமைப்புப்படி, பல மாநிலங்களிலும், பல்வேறு அரசியல் கட்சிகளும் ஆட்சிக்கு வர வழி இருக்கிறது; அப்படி, மாறி மாறி அமையும் கட்சி ஆட்சியினிடம் கல்வி ஒப்படைக்கப்படுமானால், அது குழப்பத்தையும் முரண்பாடுகளையும்தான் உருவாக்கும்;

‘கல்வி, ஒரு தேசியப் பொறுப்பாகக் கருதப்பட வேண்டும்; மேலும் ஆட்சியின் குறுக்கீடு மிகக் குறுகிய அளவே இருக்க வேண்டும்; அப்போதுதான் கல்வி, ஒரு சுமுகமான வளர்ச்சியைப் பெற முடியும்,”

என்று, சௌராட்டிர மாநில கல்வி மந்திரி ஜகாஸ்ஜிரேமாடி குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் குறிப்பிட்டார்:—

“கல்வி விஷயத்தில் சர்க்கார் தலையீடு அறவே கூடாது; கல்வி நிலையங்களுக்கு பரிபூரண சுதந்திரம் இருக்கவேண்டும் என்பது என் சொந்தக் கருத்தாகும்.”

விவசாய அபிவிருத்திக்கு ரூ. 40 கோடி!

உ. பி. சர்க்காரின் திட்டம்!

உத்திர பிரதேச மாநிலத்தின் இரண்டாம் ஐந்தாண்டு திட்டத்தில் விவசாய அபிவிருத்தித் திட்டங்களுக்கு மட்டும் ரூ. 40 கோடி செலவு ஆகுமென மதிப்பிடப்பட்டிருப்பதாக, அம்மாநில உ. பி. விவசாய மந்திரி கூறியிருக்கிறார்.

பழவகைகள், காய்கறிகள், மற்றும் ரொக்க பலன் தரக்கூடிய பருத்தி, சணல், கரும்பு, அரக்கு முதலியன இந்தத் திட்டத்தின்படி வெகு அதிகமாக உற்பத்தி செய்வதில் கவனம் செலுத்தப்படும். இந்த உற்பத்தி மாநில உபயோகத்திற்கு மட்டுமின்றி ஏற்றுமதிக்காகவும் அமையும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

பயிறு வகைகள் உட்பட உணவுப் பண்டங்களின் உற்பத்தியை 20 லட்சம் டன் அதிகரிக்கவும், பருத்தி 1·3 லட்சம் பேல், எண்ணெய் விதைகள் 11 லட்சம் டன், அரக்கு 16,000 மணங்கு, கரும்பு 400 லட்சம் டன் அதிக உற்பத்தி செய்யவேண்டுமென திட்டம் விதிக்கிறது.

இந்த நிதி ஆண்டின் முதல் திங்களில் மாநிலங்களுக்குச் சொந்தமான இந்திய இரயில்வேக்களின் மொத்த வருமானம் ரூ 25,18,00,000; இத்தொகை சென்ற ஆண்டில் இதே காலத்தில்—அதாவது சென்ற ஆண்டு முதல் மாதத்தில் கிடைத்த வருமானத்தைவிட ரூ. 2,65,00,000 அதிகமாகும்.

உதவியின் பெயரால் உழவனுக்குத் தொல்லை!

“கிராம பாங்கிகள் தரும் கடனுக்கு வாங்கப்படும் 6¼ சதவிகித வட்டி மிக அதிகமானது; ரிசர்வ் பாங்கி, மாநில பாங்கிக்கு 1½ சதவிகிதத்திற்கு கடன் தருகிறது; மாநில பாங்கி மாவட்ட மத்திய பாங்கிகளுக்கு 2½ சதவிகிதத்திற்குக் கடன் தருகின்றது; மாவட்ட பாங்கிகள் கிராம பாங்கிகளுக்கு 4½ சதவிகிதத்திற்கு கடன் தருகின்றன; பின்பு, கடன் வாங்குபவர், கிராம பாங்கியிடம் 6¼ சதவிகித வட்டிக்கு வாங்க வேண்டியுள்ளது.

“1½ சதவிகிதத்தில் துவங்கும் வட்டி. விகிதம், கடன் வாங்குபவர் கைக்கு வரும்போது 6¼ சதவிகிதமாகிவிடுகிறது; எனவே, இது பற்றி மத்திய பாங்கிகள் ஆலோசித்து ஆவன செய்யவேண்டும்,”

—என்று, சென்னை மாநில கூட்டுறவு இலாகா ரிஜிஸ்திரார் ஏ. பழனியப்ப முதலியார் திருநெல்வேலியை அடுத்த பெருங்குளம் கிராமத்தில் கிராம கூட்டுறவு பாங்கி ஒன்றைத் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

கழகக் கூட்டம்

★

குருசாமிபாளையம் பாவடி (சேலம்)

30—6—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: ஜி. பி. சோமசுந்தரம்

பேசுவோர்:

ஈ. வெ. கி. சம்பத்

ஈ. ஆர். கிருஷ்ணன்

தி. மு. க. பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

கோவை வருகையும், மாநில மாநாட்டு நிதியளிப்பும்

★

“3-7-55 அன்று, பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கோவை வர இசைந்துள்ளார்கள். அன்று காலை வரவேற்பும், மாலை ஊர்வலமும், சிதம்பரம் பூங்காவில் வரவேற்புக் கூட்டமும், நிதியளிப்பு விழாவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எனவே, கோவை நகரிலும், சுற்றுப்புறங்களிலும் மாநில மாநாட்டு நிதிக்காக வசூல் புத்தகங்கள் பெற்றுள்ள தோழர்கள் உடனடியாக வசூல் செய்துள்ள பணத்தையும், சிறு புத்தகங்களையும் திருப்பிக் கொடுக்க வேண்டுகிறேன்,”

என்று, கோவை நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் சே. அ. ராசமாணிக்கம் அறிவிக்கிறார்.

குறிப்பு: 3-7-55 நடுப்பகலில் பொதுச்செயலாளருக்கு கழகச் சார்பில் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கலந்துகொள்ள விரும்பும் தோழர்கள் அதற்குரிய கட்டணத்தை நகரக் கிளையில் செலுத்தி கலந்துகொள்ளும்படி வேண்டுகிறேன்.

பெங்களூர் மாவட்ட தி.மு.க. பிரதிநிதிகட்கு

★

“3-7-55 மாலை 2 மணிக்கு, பெங்களூர் - பிளாக்பள்ளியில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில், பெங்களூர் மாவட்ட பிரதிநிதிகள் கூட்டம் நடைபெறும். அதுபோது, பல்வேறு முக்கிய பிரச்சினைகள் ஆராயப்படும்,”

என்று, பெங்களூர் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஏ. டி. பிரான்சிஸ் அறிவிக்கிறார்.

வேண்டுகோள்

“எனக்குக் கடந்த சில திங்களாக இருந்துவந்த செரியா நோய், இப்போது சற்று மிஞ்சி நிற்பதால் பெரிதும் உடல் வலிமைக் குன்றியிருக்கிறேன். இரண்டு திங்களுக்கு மேல் மருந்துண்டு, ஓய்வுபெறவேண்டுமென டாக்டர் பணித்துள்ளார்; எனவே, இதுவரை ஒத்துக்கொண்டிருக்கிற நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள இயலாதவனாயிருக்கிறேன் என்பதுடன், உடல்நிலை சரியாகும் வரை, நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ள அழையாதிருக்கவும் வேண்டுகிறேன்”

என்று அருப்புக்கோட்டை தோழர் எம். எஸ். இராமசாமி அறிவிக்கிறார்.

புதுமைப் பித்தன் நினைவு நாள்

30—6—55 மாலை 6 மணிக்கு, சென்னை, மவுண்ட் ரோடு, மகாஜன சபையில், தமிழ் எழுத்தாளர் சங்கச் சார்பில், புதுமைப் பித்தன் நினைவு நாள், திரு. ம. பொ. சிவஞானம் தலைமையில் நடைபெறும். பிரமுகர்கள் பலர் பேசுவர்.

ஆசிரியருக்குக் கடிதம்:

‘தினத் தந்தி’யின் போக்கு

ஆசிரியர்: ‘நம் நாடு’

ஐயா,

எங்கள் ஊருக்கு அருகாமையில் வேளூர் என்னும் ஊரில், 23—6—55ல், அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெற்ற திருமணத்தின்போது, தாலி மட்டும் கட்டினார்களே தவிர, மற்றைய எந்தப் புரோகித சடங்குகளோ, புரோகிதர் மந்திரமோ நடைபெறவில்லை இது திருமணத்தில் கூடியிருந்த பெரும் திரளான மக்களும் அறிந்த உண்மை. ஆனால், 25—6—55 (வெளியூர் பதிப்பு) ‘தினத் தந்தி’யில் வெளிவந்த செய்தி ஒன்றில், அண்ணாதுரை தலைமையில் புரோகிதர் மந்திரம் சொல்லி தாலி கட்டிய திருமணம் நடைபெற்றதாயும், அது பற்றி அண்ணாவை நிருபர் விசாரித்ததற்கு, எனக்கு ரொம்பவும் வேண்டிய குடும்பம்—அதனால் புரோகிதத் திருமணமாயிருந்தாலும் பரவாயில்லை என்று மன்னித்து ஒத்துக்கொண்டதாக பதிலளித்ததாயும் வந்திருக்கிறது.

இது பற்றி ‘தினத் தந்தி’ நிருபரை, தவறான செய்தி அனுப்பியதற்குக் காரணம் வினவிய போது, ‘நான் நடந்ததைத்தான் எழுதியிருந்தேன்; ஆனால், அந்த செய்தியைத் திருத்தி வெளியிட்டிருக்கிறார்கள்; ஆகையால் குற்றம் என்னுடையதல்ல; அலுவலகத்தைச் சேர்ந்தது,’ என்று பதில் அளிக்கிறார்.

‘இம்மாதிரி நேரே கண்ட செய்தியையே பொய்யாக வெளியிட்டிருக்கிறார்களே, அதேமாதிரிதான் எல்லா செய்தியும் பொய்யாக இருக்கும்’ என்று கூறி, கழகத்தைச் சேராத பொதுமக்கள் கூட ‘தினத் தந்தி’ வாங்குவதை நிறுத்திவிட்டனர்.

இரா. தருமலிங்கம்,
திருத்துறைப்பூண்டி.

நன்றி

26-6-55ல், சென்னை மாவட்ட முன்னாள்செயலாளருக்குப் பாராட்டும், புதிய செயலாளருக்கு வரவேற்பும் தருவதற்காக நடைபெற்ற விழாவை ஒட்டி, கழகத் தலைவர்களுடன் சென்னை மாவட்ட தோழர்கள் புகைப்படம் எடுத்துக் கொண்டனர். விழாவில் பிரபல புகைப்படக்காரர்களான மண்ணடி ‘முத்து ஸ்டுடியோ’க்காரர்களுக்கும் சென்னை மாவட்ட தி. மு. கழகத்தாரால் நன்றி தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

தோல் தொழிலும் பாதிக்கப்படுகிறதாம்!

லண்டன், ஜூன் 28—

“இந்தியாவிலிருந்து ஏராளமான பொருட்கள் இறக்குமதியாவதை யொட்டி பிரிட்டனின் நெசவுத் தொழில்கள் மட்டும் அல்லாமல், தோல் தொழிலும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது,”

என்று பிரிட்டன் தோல் சாமான்கள் ஏற்றுமதிக் கார்ப்பொரேஷன் தலைவர், அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

1954 செப்டம்பரோடு முடிவடைந்த இரண்டு ஆண்டு காலத்தில் சமுதாய நலத் திட்டத்தின் கீழ், மொத்தம் 5,015 பேர் கிராம ஊழியர்களாகப் பயிற்சி பெற்றனர். 1966 பேர் கிராம ஊழியர் பயிற்சிபெற்று வந்தனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது ஆசிரியர்: இரா நெடுஞ்செழியன் எம். ஏ.